*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2024** **05 அக்டோபர், 2024**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரி, வாணரப்பேட்டை அமலோற்பவம் மேல்நிலைப் பள்ளியின் பவள விழாவை ஒட்டி நடைபெறும் கலை, அறிவியல் மற்றும் திறன் கண்காட்சியை மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு. K.கைலாஷ்நாதன் இன்று(05-10-2024) தொடங்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர் திரு அனிபால் கென்னடி, கோவா மாநில அரசு செயலர் திரு வல்லவன், கல்வித்துறை இயக்குநர் திரு பிரியதர்ஷினி, இணை இயக்குநர் திருமதி சிவகாமி ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய துணைநிலை ஆளுநர்,

- அமலோற்பவம் பள்ளி கடந்த 40 ஆண்டுகளாக நல்லதொரு கல்விச் சேவையாற்றி ஒரு கல்விப் பாரம்பரியத்தை தொடங்கிவைத்திருக்கிறது.
- கல்விக் கனவோடு மிகச் சிறியதாக தொடங்கப்பட்ட இந்த பள்ளி பல தேடைகளை சாதனைகளாக மாற்றி இன்று மாணவர்களை கல்வியிலும் மற்ற துறைகளிலும் தேசிய மாநில அளவில் உயத்தும் அளவிற்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது.
- இந்த பள்ளி மாணவர்கள் NEET போன்ற போட்டித் தேர்வுகளில் முன்னணியில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். பல்வேறு திறன்களை வளர்த்திருக்கிறார்கள். அதற்காக ஆசிரியர்களின் அர்ப்பணிப்பையும் கடின உழைப்பையும் நான் பாராட்டுகிறேன்.
- NEET தேர்வு மட்டுமல்லாமல் IAS போன்ற குடிமைப்பணி தேர்வுகளிலும் மாணவர்களை முன்னிறத்த வேண்டும். அதற்கான விதையை ஆசிரியர்கள் மாணவர்களில் மனங்களில் இளமையிலேயே விதைக்க வேண்டும்.
- ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்கப்படுத்திவரும் பள்ளி நிர்வாகத்தை நான் பாராட்டுகிறேன்.

என்று தெரிவித்தார்.